பரி.பவுல்

# அஹமதி தமிழ் திருச்சபை

" நான் போகும் வழியை அவர் அறிவார். அவர் என்னைச் சோதித்தபின் பொன்னாக விளங்குவேன். "

யோபு 23:10

## குவைத்

## செய்திமலர்

இதழ்:09 மலர்:32

## JULY 2026

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



## “ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருபவர்”

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் மேலான கிருபையினால் 2026 -ம் ஆண்டின் 7-வது மாதத்தில் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். விடுமுறைக்கு செல்கின்ற மற்றும் விடுமுறையை முடித்து வருகின்ற யாவருக்கும் கர்த்தர் போதுமானவராய் இருப்பாராக.

தேவனுக்கு பிரியமானவர்களே! நம்முடைய தேவன் நித்தமும் நம்மையும் நம் குடும்பத்தையும் கர்த்தர் போஷிக்கிற தேவனாய் இருக்கிறார் என்பதை எந்த நிலையிலும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு ஆதாரமாக நாம் அநேக வசனங்களைக் கேட்டோ அல்லது வேதத்தை வாசித்தோ அறிந்திருந்தாலும் தெரிந்திருந்தாலும் நாம் அதற்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். ஏனென்றால் எந்த ஒரு மனிதனுக்கும் ஆகாரம் இன்றியமையாதது. நாம் எவ்வளவுதான் பணம் பொருள் ஈட்டினாலும் அவைகள் நம் வயிற்றை நிரப்பாது. உண்ணும் மனநிலை காணப்பட வேண்டும்.

**"மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்"** (சங். 136:25) என்று சங்கீதக்காரனும் மாம்ச தேகமுள்ள எல்லா ஜீவன்களையும் கர்த்தரே போஷிக்கிறார் என்பதை உறுதி செய்கிறார். நம் தேவன் தாம் சிருஷ்டித்த எந்த ஜீவன்களும் தேவனைத் தேடி அவரை சார்ந்து அவரையே பற்றிக் கொண்டிருக்கிறவர்களுக்கு விசேஷமாக எந்த குறைவுமின்றி போஷிக்கிற தேவன் நம் தேவன். நோவாவையும் அவன் குடும்பத்தையும் பேழையில் வைத்து போஷித்து காத்தார். இஸ்ரவேல் ஜனங்களை போஷித்து (மன்னா) காத்தார்... ... அந்த நல்ல தேவனே நம்மையும் நம் குடும்பத்தையும் ஒவ்வொரு நாளும் போஷிக்கிறார்.

**"ஏற்ற வேளையில் ஆகாரத்தைத் தருவீர்"** (சங். 104:27) என்று வேதம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு போதிக்கிறது.. ஆகவே நாம் வித விதமாய் உண்ணும் போதும் அல்லது அன்றாடம் கிடைப்பதை உண்ணும் போதும் கர்த்தர் தாமே நம்மை நினைவு கூர்ந்து நம்மை போஷிக்கிறார் என்பதை என்றும் மறவாமல் நினைவு கூறவேண்டும். நினைவு கூறுவதோடு நின்று விடாமல் சங்கீதம் 136:25 _ல் மேலே சொல்லப்பட்டது போல நமக்கு ஆகாரம் தருபவரை துதிக்க மறவாமல் இருக்க வேண்டும். அவரை துதிக்க கடனாளிகளான நாம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் சபையின் கூடுகைகளில் தவறாமல் கலந்து கொள்கிறவர்களாய் வாழவேண்டும். மனிதர்களைப் பார்த்து சபையில் கூடிவராமல் தேவனை மட்டும் நோக்கிப் பார்த்து சபை கூடிவருதலை விட்டுவிடாமல் நம் தேவனை துதிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் **"மரணபரியந்தம் நம்மை நடத்துவார்"** (சங். 48:14).

கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக.
நம்மேல் கிருபையுள்ள தேவனுக்கே என்றென்றும்
மகிமை உணடாவதாக. ஆமென்..

கர்த்தர் கிருபையில்
சகோ. ஆரோக்கியதாஸ். P

தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குதத்தமுள்ளதாகையால் எல்லதவற்றிலும் பிரயோஜனமுள்ளது **I தீமோத்தேயு 4:8.** இந்த நாட்கள் தேவபக்தி வேகமாக குறைந்து கொண்டு வருகிறகாலம். நாகரீகங்களும், நவீன வசதிகளும் தேவபக்தியை குறைத்து போடுகின்றன. விஞ்ஞான உலகில் வாழ்கிறோம் என்று சொல்லி மனுஷன் தேவபக்தியை அசட்டை செய்கிறான் மட்டுமல்ல இன்டர்நெட் (Internet) கிறிஸ்தவ வீடுகளில் புகுந்து கொண்டு வேத வாசிப்பிற்கும் ஜெபத்திற்கும் தேவ பக்திக்குரிய நேரங்களை மட்டுப் படுத்துகின்றன. இன்னும் ஒரு கூட்டத்தார் நான் தேவபக்தியாய் இருந்து என்னை பிரயோஜனம் என்று தன்னுடைய வாழ்வின் தோல்விகளை நினைத்து மனம் சோர்ந்து போகிறார்கள் ஆனால் வேதம் சொல்கிறது தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் உள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது **I தீமோத்தேயு 4:8.** ஆகவே தேவ பக்தியை விட்டுவிடாதீர்கள். இன்று தோல்வியை போல் தோன்றுகிறவைகள் மிக விரைவிலே உங்களுக்கு மிகுந்த நன்மையாய் மாறும். தேவனில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது. இன்று நமக்குள்ள பாடுகள் நமக்கு ஆசீர்வாதமாக மாறும்
.

## தேவ பக்தி பாதுகாப்பளிக்கிறது

தேவ பக்தி நமக்கு பாதுகாப்பை அளிக்கிறது பக்தியுள்ளவர்களை தேவன் தமக்கென்று தெரிந்து கொள்கிறார். கர்த்தருடைய தூதன் அவர்களை சூழ பாளயம் இறங்கி பாதுகாக்கிறார். சோதோம் கொமோரோவின் பாவமும் அக்கிரமும் வான பரியந்தம் எட்டினபோது கர்த்தர் அந்தப் பட்டணத்தை அழிக்க சித்தம் கொண்டார். ஆனால் தேவ பக்தியுள்ள நீதிமானகிய லோத்துக்கோ கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்தது கர்த்தர் அவருடைய குடும்பத்தை காக்கும்படி தம்முடைய தேவ தூதர்களை அனுப்பினார் காரணம் என்ன? தேவ பக்தி தேவனுடைய பார்வையில் விலையேறப்

பெற்றது. எப்படியும் வாழலாம் என்று எண்ணி மனம் போல பாவ வழிகளில் வாழ்கிறவர்கள் எந்த பிரயோஜனத்திற்கும் உதவாதவர்கள் ஆனால் தேவபக்தியுள்ளவர்களோ கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாய் இருக்கிறார்கள். ‘ அவர்கள் நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியை தந்து இலையுதிரதிருக்கிற மரத்தை போலிருக்கிறார்கள்’ **சங் 1:3.**

## தேவ பக்தி உயர்வை அளிக்கிறது

தேவ பக்தி பாதுகாப்பை மட்டுமல்ல ஏற்ற வேளையில் உயர்வையும் தருகிறது. ஆகவே நம்முடைய தாழ்வை நினைத்து தேவபக்தியை கைவிட்டு விடாதிருங்கள். நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக படையெடுத்து வந்தபோது தானியேலையும் அவனுடைய நண்பர்களையும் சிறைபிடித்து கொண்டு போனான். அப்பொழுது தானியேல் கர்த்தரை நம்பின எனக்கு ஏன் இப்படி நடந்தது ? நான் பக்தியாய் இருந்து என்ன பிரயோஜனம் ? பாபிலோனிலே நான் அடிமையைப் போல வாழப்போகிறேனே என கலங்கியிருக்க கூடும். ஆனாலும் பாபிலோனிலும் பக்தியாய் வாழ தீர்மானித்தார்கள். ராஜாவின் போஜனத்தினாலும் திராட்சை ரசத்தினாலும் தங்களை தீட்டுப்படுத்தாதபடி தேவபக்தியை காத்துக்கொள்ள தீர்மானித்தார்கள். பொற்சிலையை பணியாவிட்டால் அக்கினி சூளையிலே பங்கடைவோம் என்ற நிலைமை வந்த போதும், சிங்க கெபியிலே போடப் பட வேண்டிய நிலைமை வந்த போதும், அந்த வாலிபர்கள் தேவ பக்தியை விடவில்லை ஜெப ஜீவியத்தையும் விடவில்லை. பாபிலோனிலே பல ராஜாக்கள் வந்து கடந்து போன போதிலும் தானியேலோ தேசத்தில் உயர்ந்தவனாகவே இருந்து வந்தான். பாவி நூறுதரம் பொல்லாப்பை செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்கு பயந்திருக்கிறவர்களே நன்றாயிருப்பார்கள் **பிரசங்கி 8:12.** யோசேப்பு சிறுவயதிலிருந்தே தேவபக்தியுள்ளவனாய் வாழ்ந்தான். ஆனால் அவருக்குளத்தனை எத்தனை சோதனை போத்திபாரின் வீட்டிலே

அடிமையாய் வேலை செய்ய வேண்டியிருந்தது. தேவ பக்தியினிமித்தம் சிறைச்சாலையில் தள்ளப்பட்டார். அபாண்டமாக பழியை சுமக்க வேண்டியிருந்தது ஆனால் அவன் பக்தியை கர்த்தர் கனம் பண்ணி ஏற்ற வேளையில் அவனை உயர்த்தினார். ஏற்ற காலத்தில் கர்த்தர் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரத்துக்குள் அடங்கி இருப்போம்.

நம்முடைய தாழ்வில் ஒருபோதும் முறுமுறுக்காதீர்கள். நமக்கு வருகிற போராட்டங்களில் சோர்ந்து போகாதிருங்கள். கர்த்தருக்கு காத்திருங்கள் பக்தி உயர்வை அளிக்கும் என்று பேதுரு விசுவாசித்த படியினால் தான் அவன் சிறைச்சாலையில் நிம்மதியாய் படுத்து உறங்கினான். அவன் மனதில் பயமில்லை. தேவபக்தியுள்ள என்னை ஆண்டவன் பாதுகாத்து உயர்த்துவார் என்கிற அசைக்க முடியாத விசுவாசம் அவருக்கு இருந்தது. கர்த்தர் அந்த விசுவாசத்தை கனப்படுத்தினார். தம்முடைய தேவ தூதனை அனுப்பி பேதுருவின் கைகளிவிருந்த சங்கிலிகள் கழன்று விழ செய்து சிறைச் சாலையின் கதவுகள் திறந்து அவர் விடுதலைபெற்றவனாய் நடந்து வெளியே வந்தார்.

## தேவ பக்தி விருத்தியை தருகிறது

'உசியா ராஜா கர்த்தரை தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்' II நாளாகமம் 26:5. அவன் எவ்வளவு காலம் தேவ பக்தியுள்ளவனாய் இருந்தானோ அவ்வளவு காலமும் அவன் விருத்தி அடைந்து கொண்டே இருந்தான். ஆனால் எப்பொழுது தேவ பக்தியை கைவிட்டு பெருமை பாராட்டினானோ அப்பொழுதிலிருந்தே தாழ்வடைய தொடங்கினான். தேவ பக்தி என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் வைத்துவிட்டு பின்பு காற்றில் பறக்கவிட கூடியது அல்ல. சிலர் ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை மாத்திரம் தேவ பக்தியாய் இருக்கிறார்கள் மற்ற நாட்களில் உலகத்தாரை போல ஜீவிக்கிறார்கள் என்றென்றும் தேவபக்தி உள்ளவர்களாயிருந்தால் என்றென்றும் விருத்தியுள்ளவர்களாகவே முன்னேறி செல்வீர்கள்.

யோசுவாவிடம் கர்த்தர் இந்த நியாயபிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டு பிரயாதிருந்தது. இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதை தியானித்து கொணடிருப்பாயாக . அப்பொழுது உன் வழியை வாய்க்க பண்ணுவாய் அப்பொழுது புத்திமானாய் நடந்து கொள்ளுவாய் என்றார் **யோசுவா 1:8.** நாம் தேவ பக்தியுள்ளவர்களாய் இருந்தால் கர்த்தர் நம்மை நீடிய ஆயுளினால் திருப்தியாக்குவார். வாதையோ வியாதியோ நம் கூடாரத்தை அணுகாது தேவபிள்ளைகளே தேவ பக்தியில் பெருகுவோமாக. **'தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்'** தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கர்த்தர் கிருபையில்

**சகோதரி. மெர்சிலின் தயா ஏசுரெத்தினம்.**

## வாலிபர் பகுதி

சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன் அவர்கள் கர்த்தருடைய நாமத்தின் மேல் நம்பிக்கை வைப்பார்கள். செப்பனியா 3:12.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிறுமையும் எளிமையுமான நம்மை தேடி வந்தார். நாம் கர்த்தருடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைக்க அவருடைய மாதிரியை பின்பற்றி நடக்க கர்த்தர் விரும்புகிறார். வாலிபர்களாகிய நாம் எப்படிபட்ட மாதிரியை பின்பற்றி நடக்கிறோம்?

எரேமியா 32:21-32 ல் நாம் பார்க்கும் போது பழைய ஏற்பாட்டின் காலத்தில் கர்த்தர் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் கானான் தேசம் முழுவதையும் அவருடைய சந்ததிக்கு கொடுப்பேன் என்று வாக்கு பண்ணியிருந்தார். கர்த்தர்

இஸ்ரவேலரை எகிப்தின் அடிமை தனத்திலிருந்து மீட்டு அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் ஓங்கிய புயத்தினாலும் பாலும் தேனும் ஓடுகிற அந்த நல்ல தேசத்தை சுதந்தரிக்கும்படி செய்தார். ஆனாலும் கர்த்தருடைய நியாயபிரமாணத்தின் படி நடவாமலும் கர்த்தர் கற்பித்ததொன்றையும் செய்யாமல் போனார்கள். இதனால இஸ்ரவேலர் அசீரியர்களின் சிறையிருப்பின் மூலம் சிதறடிக்கப் பட்டார்கள். இப்போதும் யூதேயா பாபிலோன் ராஜாவின் கையிலே ஒப்பு கொடுக்கப் படும் என்று கர்த்தர் சொல்கின்றார் என்று எரேமியா இறை வாக்குரைகின்றார்.

எரேமியா 32:30 ல் பார்க்கும் போது இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் சிறு வயது முதலே என் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள் என்று கர்த்தர் சொல்கிறார். எரேமியா 32:32 ல் பார்க்கும் போது இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் அவர்கள் ராஜாக்கள் பிரபுக்கள் ஆசாரியர்கள் தீர்க்கதரிசிகள் யூதாவின் மனுஷர் எருசலேமின்குடிகள் அனைவரும் கர்த்தருக்கு கோபம் உண்டாக்கினார்கள் இன்னும் பல அருவருப்பான காரியங்களை செய்ததால் நியாய தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார். எரேமியா 32:32 ல் இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் (இயேசு கிறிஸ்து) என்னாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ என்று வேதம் சொல்கிறது.

எரேமியா32:37-42 இந்த பகுதியில் ஆண்டவருடைய சிதறடிக்கப்பட்ட நம்மை ஆண்டவருடைய சமூகத்திலே கூட்டி சேர்ப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார் அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் நான் அவர்கள் தேவனாயிருப்பேன். நாம் நமக்கு நன்மை உண்டாகும்படி **சகல நாட்களிலும்** கர்த்தருக்கு பயப்படும் படிக்கு கர்த்தர் நமக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு நமக்கு நன்மை செய்யும்படிக்கு நம்மை விட்டு பின் வாங்குவதில்லை என்கிற **நித்திய உடன்படிக்கையை** (அவருடைய இரத்தத்தினாலே மத் 26:26-28) அவரை விட்டு நாம்

9 அகன்று போகாதபடிக்கு அவருக்கு பயப்படும் பயத்தை நம் இருதயத்திலே வைத்திருக்கிறார். நம்மை அவருடைய பரம கானான் தேசத்திலே கூட்டி சேர்ப்பேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

வாலிப பிள்ளைகளே சிறுமையும் எளிமையுமான நம்மை தேடி இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். **புதிய உடன் படிக்கையின்** பிள்ளைகளாகிய நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய வீட்டில், நம்முடைய குடும்பத்தில், நம்முடைய திருச்சபையில், நம்முயை சமூகத்தில், நம்முடைய தேசங்களிலே, நாம் எப்படிப்பட்ட மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றோம் அவர் நமக்கு காண்பித்த மாதிரியை பின்பற்றி நடக்கிறோமா? **நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார் லேவி 19:2, Iபேதுரு 1:16.** தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில்**

**ATC Youth Team**

Be an Example : I Timothy 4:12

**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.** I யோவான் 2:15

1.**பொருட்கள் மீது ஆசைப்பட்ட ஆகான் இஸ்ரவேலரின் தோல்விக்கு காரணமானான்.(யோசு-7:20)**

2.**கொழுத்த மிருக ஜீவன்கள் மேல் ஆசைப்பட்ட சவுல் ராஜமேன்மையை இழந்தான். 1-சாமு-15:23.**

3. **பொருட்கள் மேல் ஆசைப்பட்ட கேயாசி குஷ்டரோகியாய் மாறிப்போனான். 2-ராஜா-5:27**

4.**30 வெள்ளிக்காசுக்காக ஆசைப்பட்ட யூதாஸ் காரியோத்து இயேசுவையே காட்டிக்கொடுத்தான். யோவா-18:3**

5.**விற்ற நிலத்தின் கிரயத்தை வஞ்சித்து வைத்த அனனியாவும் சப்பீராலும் மரித்துப் போனார்கள் அப்-5:1-10**

6.**இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்த தேமா, பவுல் அப்போஸ்தலனை பிரிந்து போனான். 2-தீமோ-4:10**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

சகோதரி.ரெஜினா ராமமூர்த்தி
சகோ.அருண் செல்வகுமார்
செல்வன்.ஜோசப் பிரின்ஸ் ஜெகநாதன்
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க்
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வி.அஃபியா ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஸ்நேகா எபிநேசர்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
செல்வன்.டேனியேல் ஜான் போஸ்கோ
செல்வி.காவ்யா கண்ணன்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
செல்வன்.ஆல்பயூஸ் கிறிஷ்
சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வன்.ஜார்ஜ் பெர்னான்டஸ்
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
செல்வன்.நிதின் சுரேந்தர் சந்தோஷ்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸப்பரின் தீமோதி சிவகுமார்
செல்வன்.ஜான் லேவிஸ் ஜான்கெஸ்டன்
செல்வி. வென்பா ஜாயிஸ் பிரியா
சகோதரி. உஷா ராணி

சகோதரி.அமலோர்பவ மேரி
சகோ.தாமஸ்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
சகோதரி.எலிசபெத் வெங்கடேஷ்
சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.தாஸ் கருணா
செல்வன்.மெல்வீன் சாம்
செல்வி.பிரக்யா சந்தோஷ்
சகோ.சதீஷ்குமார் எத்திராஜ்
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
செல்வி.ஹானி ஹார்ஷிதா
செல்வி.லிடியா இபோன்சா குணா
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.ஸ்டாலின்
சகோ.வின்செண்ட் ஸ்வீட்
சகோதரி.பெபின்மேரிஜோ ஜெய்சாம்
சகோதரி.எப்ஷிபா பாமா சாம் ஆனந்த்
சகோ.அசோக் குமார்
சகோ.சைமன் ஜெயகுமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்



கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி/திரு. பக்தராஜ் & ஷீலா இன்பா ராணி
திருமதி/திரு. அசோக்குமார் & ஜோஅன் ஆஃப் ஆர்க்
திருமதி/திரு. ஜோன்செல்வசிங் & மெர்லின் லிக்னி
திருமதி/திரு. சதீஷ் குமார் & ஜீனா
திருமதி/திரு. ஜெஸ்டின் & அனிதா
திருமதி/திரு. வர்கீஸ் & பத்மினி
திருமதி/திரு. ரிச்சர்ட்சன் டேனியல் & பிரியதர்சினி
திருமதி/திரு. டேனியல் தேவபிரசாத் & உஷா ராணி

# 2026 – ஜீலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/7/2026 | Sis. ஆஸ்லின் சுபின் | Sis. தயா ஏசுரெத்தினம் |
| 12/7/2026 | சகோ.கிரன் | சகோ. ஆண்டனி |
| 19/7/2026 | Sis. செலின் டேவிட் | Sis.பிரிசில்லா ஆமோஸ் |
| 26/7/2026 | சகோ. சதீஷ்குமார் | சகோ. பக்தராஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/07/2026 | சகோ.வெங்கடேஷ் | சகோ. தாமஸ் |
| 10/07/2026 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ஜெகநாதன் |
| 17/07/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/07/2026 | சகோ. எபிநேசர் | சகோ. ஸ்டாலின் |
| 31/07/2026 | சகோ. டேவிட் | சகோ. பிராங்கிளின் |

### ஆராதனை ஒழுங்குகள்

சங்கிலி தொடர் ஜெபம்

02/07/2026 மாலை 6:00 முதல் 03/07/2026 காலை 6:00 வரை

**09/07/2026**

**முழு இரவு ஜெப ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல்

அதிகாலை 1:00 மணி வரை

**18/07/2026**

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல்

இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி – எபிரேயர்

**31/07/2026**

**வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல்

இரவு 8:15 மணி வரை

வேத வினா பகுதி–அப்போஸ்தல நடபடிகள்

**25/07/2026–Saturday**

Area Prayer Cell

Time-6:30-7:30

### சனிக்கிழமை

சிறுவர் வேதாகம பள்ளி

( June முதல் August வரை விடுமுறை )

### திங்கட்கிழமை

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

### செவ்வாய்கிழமை

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 ஜீலை மாதத்திற்கான வேத வினா!



**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1.கெம்பீரித்து பாடு என்று யாரிடம் கூறப்பட்டுள்ளது ?
2.பரிசுத்த தேசத்திலே கர்த்தரின் பங்கு யார் ?
3.யோசுவா என்ன வஸ்திரம் தரித்தவளாய் தூதனுக்கு முன்பாக நின்றிருந்தான் ?
4. உச்சியில் இருந்த கிண்ணத்தின் மேல் இருந்தது என்ன ?
5.மரக்காலை பூமிக்கும் வானத்திற்கும் நடுவாக தூக்கிக் கொண்டு போனது எத்தனை ஸ்திரிகள் ?
6.கர்த்தர் தீருவின் பலத்தை எங்கே முறித்து போடுவார் ?
7.ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளாதபடி தங்கள் இருதயத்தை எதைப் போலக் கடினமாக்கியார்கள் ?
8.வாசலை திறக்க யாருக்கு கூறப்பட்டுள்ளது ?
9.எருசலேமின் வீதிகளில் இருக்கும் முதிர் வயதுள்ளவர்கள் கைகளில் பிடித்திருந்தது என்ன ?
10.கர்த்தருக்கு பரிசுத்தம் என்று எங்கு எழுதப்பட்டருக்கும் ?
11.எவைகள் இனி நினைக்கபடுவதில்லை என்று கர்த்தர் கூறுகிறார் ?
12.எருசலேமின் குடிகளில் தள்ளாடினவன் யாரைப் போல் இருப்பான் ?
13.யாருடைய கர்வம் தாழ்த்தப்படும் ?
14.தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்வது யார் ?
15.சகரியாவின் தாத்தா யார் ?

விடைகளை வருகின்ற 20-07-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
" சகரியா "
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

## 2026- ஜீன் மாத வேத வினாவுக்கு விடை

1. கஸ்லூகியர் I நாளாகமம் 1:12
2. கர்த்தரின் பார்வைக்கு பொல்லாதவனானபடியால் I நாளாகமம் 2:3
3. சல்மா I நாளாகமம் 2:51
4. தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சலை I நாளாகமம் 4:39
5. அசரியா I நாளாகமம் 6:10
6. பாபிலோன் I நாளாகமம் 9:1
7. அபிசாய் I நாளாகமம் 11:20
8. தாவிதின் சிறிய தகப்பனாகிய யோனத்தான் I நாளாகமம் 27:32
9. காத் I நாளாகமம் 21:9
10. சாலமோன் I நாளாகமம் 29:32
11. சீயோன் கோட்டை I நாளாகமம் 11:5
12. கர்வாலி மரம் I நாளாகமம் 10:12
13. யோசதாக் I நாளாகமம் 6:15
14. ஏமான் I நாளாகமம் 6:33
15. தேவனுடைய பெட்டியை I நாளாகமம் 13:3

## 2026- ஜீன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. சுகந்தி
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. ஜெஸ்லட் வர்க்கீஸ்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. சாந்தி
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. பத்மினி வர்க்கீஸ்

சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. நகோமி ஜான்சன்
சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோதரி. மரிய குளோரி தாஸ்
சகோதரி. சினேகா எபிநேசர்
சகோ. எபிநேசர்
சகோ. டார்வின். S.
சகோ. பால்ராஜ்
சகோ. ராஜா துரை

**சகோதரிகள் பகுதி**

## ஆசீர்வாதத்தின் இரகசியங்கள்

இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன் **ஆகாய் 2:19.** கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார் **சங் 115:12.** இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம் **யோசுவா 24:1.** அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டு போய் தம்முடைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார் **லூக்கா 24:50.** ஆசீர்வாதம் என்ற சொல் எத்தனை இனிமையானது! மனிதர்கள ஆசீர்வாதத்திற்காக அங்கும்இங்கும் ஓடி அலைகிறார்கள். பெரியவர்களைப் பார்க்கும் பொழுது ஆசீர்வாதம் பண்ணுங்கள் என்று கேட்கிறார்கள் அநேகர் தங்களுடைய பிள்ளைகளுக்கு ஆசீர் என்றும் ஆசீவாதம் என்றும் பெயர் சூட்டுகிறார்கள். நம் ஆண்டவர் எப்பொழுதுமே ஆசீர்வதிக்கிறவர். ஆசீர்வதிக்கும்படி மனதுருகுகிறவர்.

அவர்ஆதியிலே மனுஷனை சிருஷ்டித்தபோது அவனுக்கு எல்லா ஆளுகையையும் கொடுத்து ஆசீர்வதித்தார் **ஆதி 1:7,8.** சிலர் ஆசீர்வாதம் என்றவுடன் வீடு, பங்களா, கார், நல்ல உடைகள், நல்ல உணவு என்று எண்ணுகிறார்கள். அப்படியானால் உண்மையான ஆசீர்வாதம் தான என்ன? ஆசீர்வாதத்தின் ஊற்றுக்காரராகிய கர்த்தரை சுதந்தரித்துக் கொள்வதே மாபெரும் ஆசீர்வாதம். இந்த வேளையிலும் 3 விதமான ஆசீர்வாதங்களைக் குறித்துப் பார்க்கலாம்.

### 1.பெற்றோர் மூலமாய் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் வருகிறது.

பெற்றோர் நீதிமான்களாய் இருந்தால் பிள்ளைகள் ஆயிரம் தலைமுறைக்கும் ஆசீர்வாதிக்கப் படுவார்கள்.
வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் அருளும் ஈவு.

### 2.சாத்தானால் வரும் ஆசீர்வாதங்களும் உண்டு.

குதிரைப் பந்தயத்திலே பணம் ஜெயிக்க வைத்து சூதாட்டத்திலே பைத்தியமாக்கி லாட்டரி டிக்கெட்டிலே பணம் அடிக்க வைத்து மோகத்தை ஏற்படுத்துவான். மத் **4:8,9** நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகளை எல்லாம் உமக்குத் தருவேன் என்று உலக ராஜ்யங்களின் மகிமையை இயேசுவுக்கு காண்பித்தான். சாத்தானின் ஆசீர்வாதங்கள் ஆரம்பத்தில் மகிழ்ச்சியாய் இருக்கும் ஆனால் பின்போ எட்டிக் காயை விட கசப்பாகிவிடும். முப்பது வெள்ளிக் காசுகள் யூதாசை ஆறுதல் படுத்தவில்லை. நாகமானிடமிருந்து பெற்ற பணம கேயாசிக்கு குஷ்டரோகத்தையே கொண்டு வந்தது.

## 3.கர்த்தர் தரும் ஆசீர்வாதம்.

கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் நீதி **10:22.** உண்மையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

## 4.நீதிமானாய் இரு ஆசீர்வதிக்கப்படுவாய்.

நீதிமான்களுடைய சிரசின் மேல் ஆசீர்வாதம் தங்கும் நீதி **10:6.** நீதிமான் பனையை போல செழித்து லீபனானிலுள்ள கேதுருவைப் போல வளருவான் சங் **92:12.** நான் இளைஞனாயிருந்தேன் முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப் பட்டதையும அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை சங் **37:25.**

### நாம் எப்படி நீதிமான்களாகிறோம்?

a)விசுவாசத்தினாலே நீதிமான்களாகிறோம். **ரோமர் 5:1.**
b)இயேசுவின் இரத்தத்தினாலே நீதிமான்களாகிறோம்.**ரோமர் 5:9.**
c)கிரியைகளினாலே நீதிமான்களாகிறோம். **யாக் 2:24.**

## நீதிமான் எப்படிப்பட்டவன்?

1.அவன் பொய் பேச்சை வெறுக்கிறான் நீதி **13:5**

2.நீதிமான்களுடைய நினைவு நியாயமானதாயிருக்கும். நீதி **12:5**

3.நீதிமான்களுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும். நீதிமான்களுடைய உதடுகள் பிரியமானவைகளைப் பேச அறியும் நீதி **15:32.**

கர்த்தர் கிருபையில்

**சகோதரி. டெய்சி எபிநேசர்**

**திக்கற்ற பிள்ளைகள் ஊழியத்தில் நம் சபையின் மூலும் தாங்கப்படுகிற ஒரு ஸ்தாபனம்**



# Kids Corner

## JULY MONTH QUIZ FOR CHILDREN

1. Who was chosen by Paul To Travel with him after Barnabas ?
2. What Vision did Paul see at night ?
3. Who was the first convert in Philippi ?
4. What were Paul and Silas doing at midnight in prison ?
5. Who worked with Paul as tent makes ?
6. What did the belivers burn at Ephesus ?
7. Who caused the uproar at Ephesus ?
8. Who fell asleep during Paul's preaching and fell down ?
9. Who prophesied about Paul's imprisonment ?
10. Who said Almost thou persuadest to me a Christian ?
11. On Which Island was Paul Shipwrecked ?
12. What bit Paul on the Island ?

***Kids Find the answer from the Book of***

**" Acts Chapter 14-28 "**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !
தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.தாஸ் கருணா அவர்களிடத்திலும். திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்க்ளின் அவர்களிடத்திலும், போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும், ஆலய கட்டுமான ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும், கொடுத்து ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

# ANSWER'S FOR THE MONTH OF JUNE

1.Mathias – Acts 1 :26
2. The day of Pentecost – Acts 2 : 1-4
3. Silver and gold have I none – Acts 3 :6
4. Jesus Christ – Acts 4 :12
5. Ananias and Sapphira – Acts 5 : 1- 10
6. Stephen – Acts 7 : 59-60
7. Saul – Acts 8 : 5
8. Saul Saul why persecutest thou me – Acts 9 : 4
9. Dorcas (Tabitha) – Acts 9 : 36-41
10. Cornelius – Acts 10 : 1-2
11. Antioch – Acts 11 : 26
12. Paul – Acts 14 : 12

But Jesus called them unto him, and said, Suffer little children to come unto me, and forbid them not: for of such is the kingdom of God.

Luke 18:16

## CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF JUNE

Hanish
Ritiksha
Ryan
Adriel
Andrea
Fyona
Felisha
Feshika

Mahendrrika Sri
Paul Samuel
Aran Rajaselvan
Rheul Ashkinaz
Dion Bensam
Ebisha
Joel
Jerald

Name missed in June Month Magazine
Solomon

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO. ஆரோக்கியதாஸ் . P**
99870126

### செயலாளர்

**BRO. தாமஸ்**
66810423

### பொருளாளர்

**BRO. ஜான்சன்**
97610275

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M. கிறிஸ்டோபர்**
67096449

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS. டெய்சி எபினேசர்**
60686612

**என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவருடைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும்.** *சங்கீதம் 35:9*

**Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com**
**Church Website Address - ahmaditamilchurch.com**

**Church Postal Address**
**Your Name**
**PO.Box.No.46795**
**Fahaheel-64018**
**Kuwait.**

www.ahmaditamilchurch.com
Follow: ATC Tamil | YouTube | Facebook | Instagram

**PRIVATE CIRCULAR ONLY**